விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 17 | (30 - 03 - 1992) | திங்கட்கிழமை | ஓசை: 41

## பொட்டை நீக்கிவிட்டு செய்தி வாசிக்கப் பணிப்பு

(கொழும்பு)

ரூபவாஹினியில் செய்தி வாசித்த ஒரு தமிழ்ப்பெண் அணிந்திருந்த மூக்குத்தியையும், பொட்டையும் நீக்கிவிட்டுச் செய்தி வாசிக்குமாறு ஒரு மூத்த ரூபவாஹினி அதிகாரி பணிப்புரை வழங்கினார். சமீபத்தில் ரூபவாஹினியில் ஆங்கிலத்தில் செய்தி வாசிப்பதற்காக ஒரு தமிழ்ப்பெண் வந்திருந்தார். அவர் முதலில் பொட்டுடனும், மூக்குத்தியுடனும் காணப்பட்டார். சில வினாடிகளில் அவர் அணிந்திருந்த மூக்குத்தியையும், பொட்டையும் காணவில்லை இவற்றை நீக்குமாறு பணிப்புரை வழங்கிய அதிகாரியின் பெயரையும், பதவியையும் அலமசிசுநடத்தும் வாராந்தரசெய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் வெளியிட்டனர்

### புலிகளைத் தேடி தமிழகப் பொலிஸ்

# 'றோ'வின் உதவியுடன் தீவிர தேடுதல் வேட்டை

# விடுதிகளில் இலங்கைத் தமிழருக்கு தடை

## சமூகவிரோதக் கும்பல் 7 தமிழரை பிடித்து சென்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பலாச்சேனை, காக்காச்சி வெட்டை கிராமங்களிலிருந்து ஏழு தமிழர்களை கடந்த புதன்கிழமை சமூகவிரோத கும்பலொன்று பிடித்துச் சென்றுள்ளது

மண்டூர் 14 ஆம் கட்டை 13 ஆம் கட்டை பாலையடி வெட்டை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்டு சிறிலங்கா இராணுவத்தினரோடு வந்த சமூகவிரோதக் கும்பலொன்று இந்தக் கிராமங்களை சுற்றிவளைத்தது.

இந்த சுற்றிவளைப்பின் போது நாராயண பிள்ளை கிருபாகரன் (விவேகானந்தபுரம்), பாலப்போடி குருகுலசிங்கம் (கோவில்போரதீவு), பாலப்போடி விஜயகுமார் (காக்காச்சி வெட்டை). மாசிலாமணி நடராசா, ஜெயசுந்தரம் கோணமூர்த்தி, பாலிக்குட்டி இராசையா, குருசாமி மகேந்திரன் (வெல்லாவெளி) ஆகியோரை சமூகவிரோதிகள் பிடித்துச் சென்றுள்ளனர்.

## பலாலி ராணுவத்தினருக்கு ஜே.வி.பி. மரக்கறிச் செய்கை

பலாலி இராணுவ முகாமில் இருக்கும் இராணுவத்தினருக்கு தேவையான மரக்கறிகளைப் பெறுவதற்காக அங்கு மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கையில் முன்னாள் ஜே.வி.பியினர் ஈடுபடுத்தப்படுவதாக கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே ரைம்ஸ் இதுபற்றி மேலும் தகவல் தெரிவிக்கையில் முன்னாள் ஜே. வி. பியினருக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் அவர்களின் மன மாற்றத்தைப் பொறுத்து படிப்படியாக அவர்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் ஹமில்டன் வணசிங்கா கூறியுள்ளார்.

## தங்க இடம் வழங்கினால் தண்டனை என எச்சரிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் பாரிய தேடுதல் வேட்டை ஒன்றை தமிழகப் பொலிசார் ஆரம்பித்துள்ளனர். இந்திய புலனாய்வுத் துறையான "றோ" வின் உதவியுடன் இத் தேடுதல் நடைபெற்று வருகிறது. இதற்கு அனுசரணையாக இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு விடுதிகளிலும் மற்றும் தங்குமிடங்களிலும் தங்க இடம் வழங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சகல ஹொட்டல்களிலும் மற்றும் தங்குமிடங்களிலும் இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு அல்லது தற்காலிகமாக இருக்க இடமளிக்க வேண்டாம் என்று தமிழ்நாடு பொலிஸ் அறிவித்துள்ளது. இந்த உத்தரவை மீறும் ஹொட்டல் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு பொலிஸ் எச்சரித்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து தலைமறைவாகியுள்ள விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சிலரின் புகைப்படங்களைக் கொண்ட சுவரொட்டிகளும் பொலிசாரால் முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கமான குடியிருப்புப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் இப்போது நுழைந்துள்ளார்கள் என்ற தகவலையடுத்து மத்திய பொலிஸ்படைப் பிரிவு விடுதலைப் புலிகளைப் பிடிக்கும் பணியில் தமிழ் நாட்டில் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது இந்த தேடுதல் நட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 5 இல. தமிழ் இளைஞர்கள் சென்னையில் கைது

(சென்னை)

சென்னையில் தகுந்த ஆவணங்களைக் கொண்டிராமல் தங்கியிருந்ததாக கூறப்படும் ஐந்து இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை கே.கே நகர் பகுதியில் இரண்டுபேரும் சைதாப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் உடைமைகள் இராணுவத்தால் அபகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு 40 ஆம் கிராமத்தை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவம் மக்களின் உடைமைகளை அபகரித்துச் சென்றுள்ளது. கடந்த 25 ஆம் திகதி காத்தான்குடி பெரிய போரதீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் இக் கிராமத்தைச் சுற்றிவளைத்து மக்களின் உணவுப் பொருட்கள், தளபாடங்கள் என்பவற்றை அபகரித்தது.

பின்னர் அவற்றை அம் மக்களைக் கொண்டே முகாமிற்கும் கொண்டு சென்றது.

## உடுகம்பொலவை பிடிக்க தீவிர தேடுதலாம்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல தலைமறைவாகியதைத் தொடர்ந்து இவரைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படை, பொலிஸ் மற்றும் இரகசியப் பொலிஸ் ஆகியோர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இவருக்கான கடவுச்சீட்டு மற்றும் விமானச் சீட்டுக்களை ரத்துச் செய்யும்படி உத்தரவிடப்பட்டிருப்பதுடன் அமெரிக்காவில் தங்கியிருக்கும் இவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோரது விசா செல்லுபடிக் காலஎல்லைகளை குறைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது

அதேவேளை பாதுகாப்புப் படையினரிடம் சிக்காமல் அடிக்கடி இடம்மாறி தங்கி வரும் உடுகம்பொல மிகவிரைவில் கைதுசெய்யப்பட்டு விடுவார் என்று படையினர் தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். இந்து, வேம்படி

## ஜே.வி.பி. மரக்கறிச் செய்கை

பலாலி இராணுவ முகாமில் இருக்கும் இராணுவத்தினருக்கு தேவையான மரக்கறிகளைப் பெறுவதற்காக அங்கு மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கையில் முன்னாள் ஜே.வி.பியினர் ஈடுபடுத்தப்படுவதாக கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே டைம்ஸ் இதுபற்றி மேலும் தகவல் தெரிவிக்கையில் முன்னாள் ஜே.வி.பியினருக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் அவர்களின் மன மாற்றத்தைப் பொறுத்து படிப்படியாக அவர்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் ஹமில்டன் வணசிங்கா கூறியுள்ளார்.

# 13 எதிர்க்கட்சிகள் இணைந்து மாபெரும் மேதினக்கூட்டம்

(கொழும்பு)

பதினைந்து ஆண்டுகளின் பின்னர் நாட்டின் பதின்மூன்று எதிர்க்கட்சிகள் இணைந்து நடாத்தும் பொது மேதினக் கூட்டம் இவ்வாண்டு நடைபெற இருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்த கூட்டணி, இம்மேதினப் பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தினேஸ் குணவர்த்தனா இவ் இணைந்த செயற்பாடுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மேதின எழுச்சிக்காக மட்டுமன்றி நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டி வளர்ப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் இவ்வாறு செயற்பட ஆரம்பிக்கும் தினமே நமது நாட்டில் ஜன

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமதாசா அரசாங்கத்திற்கு

# எதிரான கண்டனங்கள் பரவலாக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

பிரேமதாசா அரசிற்கு எதிரான கண்டனங்கள் தெரிவிக்கப்படுவது மேலும் பரவலாக்கப்பட வேண்டும்என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் பாராளுமன்றத்திற்கு வெளியேயுள்ள சக்திகளையும் ஈர்க்கக் கூடிய வகையிலும் மக்களின் பலத்தை திரட்டக்கூடிய வகையிலும் பரவலாக போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வை.பி டி. சில்வா தலைமையிலான சிறி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அன்னை பூபதி

# நினைவஞ்சலிக் கூட்டமும் உண்ணாவிரதமும்

தியாகச்சுடர் அன்னைபூபதியின் நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் கெற்பலி(தீவகம்) வட்டுவைப் பிரிவில் இன்று நடைபெறவுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 4.00 வரை இடம்பெறும். மாலை 7.00 மணிக்கு நினைவஞ்சலிக்கூட்டம் ஆரம்பமாகும். நினைவஞ்சலிக் கூட்டத்தில்அன்பரசி, சண்முகநாதபிள்ளை, சேரலாதன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

அதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

---

தமிழ்நாடு பொலிஸ் அறிவித்துள்ளது. இந்த உத்தரவை மீறும் ஹொட்டல் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு பொலிஸ் எச்சரித்துள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து தலைமறைவாகியுள்ள விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சிலரின் புகைப்படங்களைக் கொண்ட சுவரொட்டிகளும்

# 5 இல. தமிழ் இளைஞர்கள் சென்னையில் கைது

(சென்னை)

சென்னையில் தகுந்த ஆவணங்களைக் கொண்டிராமல் தங்கியிருந்ததாக கூறப்படும் ஐந்து இலங்கைத் தமிழர்கள் தமிழக பொலிசாரினால்கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை கே.கே நகர் பகுதியில் இரண்டுபேரும் சைதாப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 3 காவலரண்கள் அழிப்பு; இராணுவம் தப்பியோட்டம்

(வவுனியா)

வவுனியா மாவட்டம் நேரிய குளத்தில் நேற்று அதிகாலை மூன்று சிறிலங்கா இராணுவக் காவல் அரண்கள் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலால் முற்றாக அழிக்கப்பட்டன.

இந்த அதிரடித்தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொண்டபோது காவலரண்களிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் ஆயுதங்களையும் தூக்கிக்கொண்டு காயங்களுடன் முகாமிற்குள் தப்பியோடி விட்டனர்.

காவலரண்களிலிருந்து விடுதலைப் புலிகளால் வெடிபொருள்களும், இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன கைப்பற்றப்பட்ட பொருள்களின் விபரம் வருமாறு:

★ ஏ.கே,எல்.எம் ஜி ரவைக் கூடுகள் - 04
★ தோட்டா ரவைகள் - 350
★ ரி.56 ரக துப்பாக்கி ரவைக் கூடுகள் - 02
★ ஜே ஆர் கைக்குண்டுகள்

மேலும் பல இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# புத்தாண்டு வடக்கில் கொண்டாட பிக்குகள் விருப்பமாம்

(கொழும்பு)

ஏப்பிரல் புத்தாண்டு தினத்தை வடக்கே கொண்டாடுவதற்கு பௌத்த குருமார் விருப்பம் தெரிவித்துள்ளனர் என கொழும்பு பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்தி நாட்டில் அமைதி நிலவும் வண்ணம் நடவடிக்கைகளை எடுக்க உதவும் நோக்கத்துடனேயே இவர்கள் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர் என்றும் அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

வடக்கே வரும்போது தலைவர் பிரபாகரனை சந்திக்க விருப்பம் கொண்டுள்ள இவர்கள் இச் சந்திப்பை உறுதிப்படுத்துவதிலேயே காலம்தாமதமாவதாக தெரிவித்துள்ளனர்.

இக் குழுவின் விஜயத்திற்கு ஒழுங்குகளைச் செய்கின்ற மாதம் பாகமி அசாஜி தேரர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானது

**- மகாசிவம்**

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களினால் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் முன்னல் செய்யப்பட்ட மறியல் போராட்டம் நியாயமானதும், நீதியானதும், மிக அவசியமானதுமாகும். மத்திய அமைச்சோ அல்லது பிரதேசக் கல்வித் திணைக்களமோ இப்போராட்டத்தை அலட்சியம்செய்து கொச்சைப்படுத்த முயன்றால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் அதன் அங்கத்தவர்களும் வெறுமனே பார்த்துக் கொண்டிராது. அவர்களின் எதிர்காலப் போராட்டங்களில் முழுமையாகப் பங்கெடுத்துக் கொள்வார்கள் எனச் சங்கத்தின் பொதுச்செயலாளர் த மகாசிவம் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

டிக்கைகளில் பாதுகாப்புப் படை, பொலிஸ் மற்றும் இரகசியப் பொலிஸ் ஆகியோர் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இவருக்கான கடவுச்சீட்டு மற்றும் விமானச் சீட்டுக்களை ரத்துச் செய்யும்படி உத்தரவிடப்பட்டிருப்பதுடன் அமெரிக்காவில் தங்கியி

அதேவேளை பாதுகாப்புப் படையினரிடம் சிக்காமல் அடிக்கடி இடம்மாறி தங்கி வரும் உடுகம்பொல மிகவிரைவில் கைதுசெய்யப்பட்டு விடுவார் என்று படையினர் தரப்பில் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். இந்து, வேம்படி

# ஆசிரியர் வெற்றிடம் நிரப்புவதற்கு முடிவு

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளான வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்க சேவை ஆணைக் குழுவின்கல்விச்சேவைச்சபை, சேவையிலுள்ள தகைமை பெற்ற ஆசிரியஆசிரியைகளி மிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி வரும் ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதியாகும். உரிய வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று கல்விச் சேவைச்சபை செயலாளர் ஏ.என். வீரரத்தினாவின் அறிவிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

# பரபரப்பான சூழலில் செஞ். நிர்வாகிகள் தெரிவு

[யாழ்ப்பாணம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைக்கான நிர்வாகிகள் தெரிவு நேற்று நடைபெற்றஇச்சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு பதவியில் இருந்ததலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர் ஆகியவர்களுக்கெதிராக மேற்படி பதவிகளுக்குப் போட்டியிட்ட அனைவரும் தமது மனுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டதால் இப்பதவிகளுக்கு போட்டி இன்றிய தெரிவு இடம் பெற்றது.

ஐந்து நிர்வாக உறுப்பினர்கள மட்டுமே. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு நல்லூர், உடுவில் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு அங்கத்தவர்களின் வருகை தடுக்கப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# முத்திரைசந்தியில்தீவிபத்து இரு கடைகள் நாசம்

[யாழ்ப்பாணம்]

யாழ். முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள மண்ணெண்ணைக் கடைகள் இரண்டு நேற்று மாலை தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளன.

ஒரு கடையில் விளக்கு கொளுத்தும் பொழுது தவறுதலாக தீ மூண்டது இக்கடை ஓலையால் அமைக்கப்பட்டிருந்தமையால் தீ விரைவாகப் பரவியது. இதற்கிடையில் அங்கு விற்பனைக்கு இருந்த மண்ணெண்ணையை அப்புறப்படுத்தும் பொழுது அதுவும் தவறுதலாக ஊற்றுப்பட்டதால் அருகில் இருந்த கடையும் சேர்ந்து எரிந்தது. சிறிது நேரத்தின் பின்னர் தீயணைக்கும் படையினர் தீயை முற்றுமுழுதாக அணைத்தனர் இந்த இரு கடைகளின் சேதம் எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை.

[பா]

## மடு அகதிமுகாமில் குடிநீருக்குத் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னாரில் கடும் வரட்சி நிலவுவதன் காரணமாக மடு அகதிமுகாமில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். அங்கு குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதையடுத்து மடு அகதி முகாமில் தங்கி வாழ நினைக்கவேண்டாம் என இந்தியாவில் இருந்து வந்துள்ள அகதிகளுக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளார்கள்.


சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ - து)
சுன்னாகம்.

## பதவி வெற்றிடம்

பின்வரும் இலிகிதர் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் ஆண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலிகிதர் பதவி கு. இ. 302 : 14
சம்பளத் திட்டம் :- 700 — 950

15 x 10 , 20 x 5

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை :-

அ) க. பொ. த. (சாதாரண) தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம் / வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம், தமிழ் பாசை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி.

வயது :-

விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 15 - 04 - 92.

பொது :-

1) பின்வரும் சான்றிதழ்களின் உண்மைப் பிரதி விண்ணப்பத்துடன் தவறாது இணைக்கப்படல் வேண்டும். இவற்றின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அ) கல்வி ஆ) பிறப்பு இ) வசிப்பிடத்தகைமை

ஈ) அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள்.

2) விண்ணப்பங்கள் யாவும் 15 - 4 - 92 அன்று பிற்பகல் 4 . 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3) சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4) விண்ணப்பப் படிவங்களை ரூ. 5/— செலுத்தி வேலைநாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ, சங்கம்
சுன்னாகம்,
28 - 03 - 92 (4118)


## ஓர் ஆண்டு நினைவு

அங்லிக்கன் திருச்சபையில்

## தமிழ் பிரதேசத்திற்கென தனி மறைமாவட்டம் தேவை

(யாழ்ப்பாணம்)

அங்லிக்கன் திருச்சபை சிங்கள அங்லிக்கன் கிறிஸ்தவர்களுக்கிடையில் உள்ள பண்பாட்டு வித்தியாசங்களின் அடிப்படையில் இரண்டு திரு மறை மாவட்டங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலைநாட்டு அங்லிக்கன் கிறிஸ்தவர்களுக்காகக் குருநாகல் ஒரு மறைமாவட்டமாகவும், கரையோர அங்லிக்கன் கிறிஸ்தவர்களுக்காக கொழும்பு மற்றொரு மறைமாவட்டமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

கடைசியாக வந்த கத்தோலிக்கத் துறவிகள் தூதுக்குழுவுக்கு முன்வந்த நல்லெண்ண குழுவில் அங்லிக்கன் சமயத் தலைவர்களும் இருந்தார்கள். இவர்களிடம் யாழ்ப்பாணத்தில் உள்ள அங்லிகன் கிறிஸ்தவர்கள் தமிழ் பிரதேசத்திற்குப் புறம்பான ஒரு மறை மாவட்டம் அமைக்கும்படி கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இப்போது தமிழ் பிரதேசம் கொழும்பு மறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது

## பனைப் பயிற்சித் திட்டம்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினால் நடத்தப்படும் பனைப் பயிற்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பயிற்சி நெறி இம் மாத இறுதியில் முடியவுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் பனை ஏறும் பயிற்சி, சீவல்பயிற்சி என்பவற்றுடன் பனந்தும்புப் பயிற்சி, நார் வேலை, பனைவெல்ல உற்பத்தி தொடர்பான பயிற்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஐந்து பயிற்சி ஆசிரியர்களினால் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது இம் மூன்று மாதப் பயிற்சியினை 49 பேர் பூர்த்தி செய்யவுள்ளனர். கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் வடமராட்சிஸ்ரீபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பனைப் பயிற்சி நிலையத்தின் முதற்கட்டப் பயிற்சி நெறியினை 18 பேர் பூர்த்தி செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வவுனியா - கொழும்பு

## தொலைபேசி வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன

(வவுனியா)

வவுனியாவிலிருந்துகொழும்புக்கும் வெளிநாடுகளுக்குமான தொலைபேசி வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளது. மூன்று லைன்களில் மட்டுமே இயங்கிய வவுனியா தொலைபேசிச் சேவை கடந்த வெள்ளிக்கிழமை முதல் பன்னிரண்டு லைன்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதென வவுனியாவில் தொலைத்தொடர்பு அமைச்சின் உயரதிகாரிகள் கூறியுள்ளனர்.


## நினைவு அஞ்சலி

பிறப்பு 1974 — 03 — 22



இறப்பு 1991 — 03 — 30

## லெப். அருண்

(க. நித்தியானந்தஈஸ்வரன்)

தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய்
தமிழீழம் மலர்ந்திடவே
தன் மானம் காக்கப் புறப்பட்டாய்


## மாபெரும் கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வலிகாமப் பிரிவினர் நடத்தும் மாபெரும் கலை நிகழ்ச்சிகள் இன்று மாலை ஏழு மணிக்கு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

பட்டிமன்றம், நாட்டிய நாடகம், நாடகங்கள் ஆகியவை உட்பட பல கலை நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெறும். முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகளும் இங்கு நடைபெறவுள்ளது.

## பாதயாத்திரைக்கு ஆதரவு சர்வோதயதலைவரும் பங்கு

சிறிலங்கா அரசைக் கண்டித்துள திர்க்கட்சிகளால் நடாத்தப்படும் பேரணி தங்காலையை அடைந்தபோது சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்தினாவும் பாதயாத்திரையில் கலந்துகொண்டார். பாதயாத்திரையின் பிரதம அமைப்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் தாம் பாதயாத்திரையில் கலந்துகொண்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாதயாத்திரை செல்லும் பாதைகளில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் வீதியோரம் அணிவகுத்து நின்று யாத்திரிகர்களை வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்து வழியனுப்பி வைப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று புவியியல் விரிவுரை மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 3 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் ''வடபிரதேசத்தில் அண்மைக் கால இறப்புக்களும் அவற்றிற்கான காரணிகளும்'' என்ற தலைப்பில் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கா.குகபாலன் உரையாற்றவுள்ளார்

## பாதயாத்திரையை குழப்பத் திட்டம்

## வெளியேற்றப்பட்ட... எதிர்த்து மனு தாக்கல்

(கொழும்பு)

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டமையை எதிர்த்து மேல்மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் ஒஸி அபயகுணசேகரா மற்றும் இருவரும் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

அவர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் பெப்ரவரி 22 ஆம் திகதி கூடிய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இருபத்திரண்டு அங்கத்தவர்களுக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்பட்டதாகவும், அக் கூட்டத்தில் தங்களை கட்சியிலிருந்து வெளியேற்றும் தீர்மானம் எடுக்கப்பட்டு தமக்கு 25 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மத்திய குழுவின் எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ளாத இக் கூட்டத்தின் தீர்மானங்களை ரத்துச் செய்யும்படியும், தம்மை கட்சியிலிருந்து வெளியேற்றியமையைசெல்லுபடியற்றதாக்கும்படியும் அவர்கள் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

## ஏழு மாவட்ட விவசாயிகள் வரட்சியால் கடும் பாதிப்பு

(கொழும்பு)

ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் நான்கு இலட்சம் விவசாயிகள் தற்போதைய வரட்சியினால் கடும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகச் சமூக சேவைகள் அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

புத்தளம், குருநாகல், பதுளை திருக்கோணமலை, மொனராகல மாவட்டங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

அத்துடன், கடந்த பத்து ஆண்டுகளில் இத்தகையமோசமான வரட்சி அவதானிக்கப்படவில்லையெனவும், பத்து இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு நிவாரண உதவி வழங்க வேண்டிய நிலை ஏற்படுமெனவும் குறிப்பிட்டார்.

இதற்கான அவசர உதவிகளுக்காகமட்டும் சமூகசேவை திணைக்களத்திற்குச் சுமார் அறுநூறு மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.


## நினைவு கூருகின்றோம்...

1992. 03. 30

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் கும்புறுப்பிட்டி காட்டுப்பகுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது தப்புவதற்காக குளத்தில் பாய்ந்தபோது முதலை கடித்ததால் எமைப்பிரிந்த

ராஜன் (பொன்னுத்துரை நடேசலிங்கம் - கும்புறுப்பிட்டி திருக்கோணமலை)


பரந்தன் முரசுமோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

2ஆம் லெப். நிமால் (பெர்னான்டோ றேமன் சுரேஸ்குமார் - திருநகர் கிளிநொச்சி)

1987 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்தபோது வீரச்சாவெய்திய

ஜெகன் (அன்ரனி எலியாஸ் குரூஸ் -பரப்பாங் கண்டல் மன்னார்)

## ஓர் ஆண்டு நினைவு



### வீரவேங்கை விஜி
(வேலுப்பிள்ளை பரமேஸ்வரன்)

கற்சிலைமடு ஒட்டுசுட்டான்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29-3-1971 | 30-3-1991 |

கற்சிலை மடுவென்னும்
மண்ணில் வந்துதித்த
பொற்சிலையே! எங்கள் குலக்கொழுந்தே!
இருபது ஆண்டு நிறைந்த ஒரு நாளில்
உன்னை இழந்தோம்
ஓராண்டு என்ன ... ... ஓராயிரம்
ஆண்டுகள் போனாலும்
போகாது உன் நினைவு

-- குடும்பத்தினர்
நண்பர்கள்

(2309)

தமிழ் மண்ணை மீட்டெடுக்க
உன் உயிரையே அர்ப்பணித்தாய்
தமிழீழம் மலர்ந்திடவே
தன் மானம் காக்கப் புறப்பட்டாய்
சலப்பையாற்றினிலே சமர் புரிந்த வீரனே
சரித்திரமாகிவிட்ட தமிழ் மகனே
நிலத்தையே அந்நியன் அழிக்க வந்த போது
-அவன்
குலத்தையே அழிக்கப் புறப்பட்ட கோமகனே
உன் பணி நாம் தொடர்வோம்.

கிளிநொச்சி -குடும்பத்தினர்

(2254)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வேப்பங்குளம் நேரடி மோதலில் வீர மரணமடைந்த

### வீரவேங்கை ரவி

சுப்பிரமணியம் ஜெயநேசன் (தயாளன்)

| தாயின்மடியில் | தாயகமண்ணில் |
|---|---|
| 20-11-1972 | 30-03-1991 |

அரக்கர் உன்னை அழித்தாலும்
அணையா தீபமாய் எம் நெஞ்சில்
ஒளியாய் மிளிரும் எம் தெய்வமே - நீ பிரிந்தும்
ஓடி மறைந்தது ஓராண்டு
அழியா நினைவாய் எம்நெஞ்சை
அணுவணுவாய் வதைக்குதடா
ஆலயமாய் விளங்கிய குழந்தையின்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கிறோம்
உன் பிரிவால் துயருறும்;

அம்மா, அம்மம்மா, அண்ணாமார்
அக்கா, சித்தி, சித்தப்பா,
உற்றார், உறவினர்

3ம் வட்டாரம்
முள்ளியவளை.

(சி4112)

## பாதயாத்திரையை குழப்பத் திட்டம்

(காலி)

விரும்பத்தகாத நபர்களைக் கதிர்காமப் பாதயாத்திரையில் சேர்த்துப்பாதயாத்திரையைக் குழப்புவதற்கான சதித்திட்டம் ஒன்றுஉருவாகியுள்ளதுஎன அதன் அமைப்பாளர் மகிந்தா ராஜபக்ஷா தெரிவித்தார்.

குடிவெறியில் இருந்தவர்கள் சிலர் பாதயாத்திரையில் காணப்பட்டார்கள் என்றும், அவர்களை விசாரித்தபோது பாதயாத்திரையைக் குழப்புவதற்கென்று சிலரால் இவர்கள் அனுப்பப்பட்டு ளதாகத் தெரிவித்துள்ளது என்று சொல்லப்படுகிறது

இவர்கள் உடனடியாக பாதயாத்திரையிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள் என்று ராஜபக்ஷா தெரிவித்தார்.

குடிவெறியில் உள்ளவர்கள் பாதயாத்திரையில் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இச் சதி தொடர்பாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## மாத்தளையில் மகாபொல

மாத்தளை பெர்னாட் அலுவிகார அரங்கில் கடந்த வருடம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில் மகாபொலவின் நிறுவனம் லலித்அத்துலத்முதலிக்கும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து லலித் அத்துலத் முதலி வெளியேற்றப்பட்ட பின்னர் பிரேமதாசாவுடன் ஒரே மேடையிலே இருக்கப்போவது முதல்தடவையாகும்.

1987 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்தபோது வீரச்சாவெய்திய
**ஜெகன்** (அன்ரனி எலியாஸ் குரூஸ் -பரப்பாங் கண்டல் மன்னார்)
**சங்கர்** (முனியாண்டி காமராஜ் - கரிசல் மன்னார்)

1989ஆம் ஆண்டு திருக்கோணமடுவில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய
**மணிவண்ணன்** (கதிர்காமத்தம்பி ஜெயசீலன் - கண்ணன் கிராமம் வாழைச்சேனை, மட்டக்களப்பு)

1991 ஆம் ஆண்டு மன்னார் வேப்பங்குளம் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய
**லெப். ஜான்** (செபமாலை ஸ்ரான்லி பெர்னாண்டோ - சிலாவத்தை முல்லைத்தீவு)
**விஜி** (வேலுப்பிள்ளை பரமேஸ்வரன் - கற்சிலைமடு ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு)
**லெப். அருண்** (கருப்பையா நித்தியானந்தஈஸ்வரன் - 101/3 திருவையாறு கிளிநொச்சி)
**லெப். யேசு** (செபஸ்தியான் யோசப் அன்ரனி - உப்பளம் ஆனையிறவு)
**புனிதன்** (பியசேன விஜயன் -குருக்களூர் வவுனியா)
**நீதி** (வே.பரமேஸ்வரன்-கற்சிலைமடு முல்லைத்தீவு)
**குஞ்சன்** (இராமலிங்கம் கமலேஸ்வரன்- சிலாவத்தை முல்லைத்தீவு)
**பைமன்** (மிக்கைல் திவ்வியநாதன் - நடுக்குடா பேசாலை மன்னார்)
**பொஸ்க்கோ** (சந்திரன் பத்மநாதன் - முருங்கன் மன்னார்)
**ரவி** (சுப்பிரமணியம் ஜெயநேசன் - முள்ளியவளை முல்லைத்தீவு)
**துசான்** (இசுதோர் வாசிங்டன் மோகனராசா- 50ஆம்படிவம் ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)
**கண்ணன்** (மாசில்லாமணி ராஜேஸ்வரன்- கொக்குத் தொடுவாய் மணலாறு)
**பைரவி** (நாகேந்திரன் சதீஸ்குமார் - நெடுந்தீவு)

கீரிமலையில் சிறிலங்காப்படையினர் குறிவைத்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய
**மிரான்டா** (பூலோகசிங்கம் உதயன் - மருத்துவ மனை வீதி மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-4119)

## சிந்தனைக்கு

மனித இனத்திடம் மாளாத அன்பு
அதிகாரத்துடன் கூடவே அடக்கம்
மதத் தெளிவுடன் கூடவே மன உணர்ச்சி வளம்
இதுவே சகோதரத்துவம்.

— சார்ல்ஸ் ஹ்யூஸ்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 30-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் 08


## நாய் வாலை நிமிர்த்த சிலர் முயற்சி

"பௌத்த குருமார்கள் இனத்துவேசிகள் எனவும் தமிழ் மக்களின் விரோதிகள் எனவும் நிலவும் கருத்துக்கள் தவறானவை என நிறுவவும் சமாதானத்தை நிலைநாட்டுவதில் பௌத்தகுருமாருக்குள்ள ஆர்வத்தை வெளிக்காட்டவுமே விடுதலைப் புலிகளுடன் பேச விரும்புவதாக யாழ் செல்ல விரும்பும் பௌத்த பிக்குகளில் ஒருவரான மாதம்பகம அஸ்வஜி தேரோ தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த ஒரு வார காலத்திற்குள் இதே போன்றதொரு கருத்தை மேலும் ஒரு பிக்குவும் தெரிவித்திருந்தார்.

சிங்களவர் - தமிழருக்கிடையில் தொடர்பின்மை மற்றும் மக்கள் நிலைமை குறித்து தொடர்பு சாதனங்கள் மக்கள் விரோதமாக நடந்து கொள்வது ஆகியன இரு இனங்களுக்கிடையிலான விரோதத்தை மேலும் மேலும் வளர்த்துச் செல்வதாக கடந்த வாரம் யாழ் வந்து திரும்பிய ஆயர்குழு தெரிவித்திருந்தது இந்த நிலையில் பௌத்த பிக்குகள் அடங்கிய ஓர் சமாதானக் குழு ஒன்று யாழ்ப்பாணம் வர முயற்சிப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. இப் பிக்குகளின் வருகையால் யுத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளையும் இதேவேளை, அழிவுகளுக்கோ அன்றி இறப்புக்களுக்கோ அஞ்சி தமது உறுதியைக் கைவிடவில்லை என்பதையும் புரிந்து கொள்ள உதவுவதோடு இராணுவத்தீர்வு ஒன்றினால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும் அத்தோடு உண்மைக்கு புறம்பான செய்திகளையே தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கம் வெளியிட்டு வருவதும் தெரியவரும்.

ஆனால் பௌத்த பிக்குகளின் விருப்பத்தின்படி இனவாதிகள் என்றோ தமிழருக்கு எதிரானவர்கள் என்றோ உலகில் பரவியுள்ள அபிப்பிராயத்தை நீக்குவது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். தமிழருக்கு எதிரானவரல்லாமல் இனத்துவேசிகள் அல்லாமல் ஒரு சில பிக்குகள் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான பிக்குகள் இனத்துவேசிகளாகவும் தமிழின விரோதிகளாகவுமே உள்ளனர் என்பதையே அவர்கள் நடத்தை நிருபிக்கின்றது.

# புலிகளின் சுதந்திரப் போராட்டமும் இந்திய அரசியலும்

**ஈழத் தமிழர்களுக்கு தனியரசு அமைத்துக் கொள்ளும் முழு உரிமையும் உண்டு என்ற நிலைப்பாட்டைக்கொண்டவர் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளரான திரு.பெ.மணிஅரசன். 'எழுமலை' பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள இந்த விசேட பேட்டியில் விடுதலைப் புலிகளின் தேசிய சுதந்திரப் போராட்டம் பற்றியும் இந்திய அரசின் பொய்ப் பிரசாரத்தின் உள்நோக்கம் பற்றியும் எடுத்து விளக்குகிறார்.**

**'இந்தியப் படையை எதிர்த்துப் போராடி திருப்பி அனுப்பிவிட்டு சிங்களப் படையுடன் போராடி முன்னேறும் விடுதலைப் புலிகளின் போர் அதிக உந்துசக்தியை இந்தியாவில் போராடும் தேசிய இனங்களுக்கு அளிக்கிறது' என்கிறார் திரு. மணிஅரசன்.**

கேள்வி:

இந்தியா, தமிழகம் ஆகியவற்றின் எதிர்காலம் குறித்தான உங்கள்கட்சியின் நிலைப்பாடு என்ன?

பதில்:

இந்தியாவில் முக்கியமாக தேசிய இன, வர்க்க, வர்ண-சாதி ஒடுக்குமுறைகள் நிலவுகின்றன. இவற்றில் மிக அதிகமான ஒடுக்குமுறையாகவும் முற்றிவரும் முரண்பாடாகவும் தேசிய இன ஒடுக்குமுறையே இருக்கிறது என்று எங்களது தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி கருதுகிறது. முதன்மை ஒடுக்குமுறையாக உள்ள தேசிய இன ஒடுக்குமுறையைச் செய்வது பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிய-பார்ப்பனிய- இந்தி ஆதிக்க இந்திய அரசு தமிழ்த் தேசியஇனம் இந்திய அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகித் துன்புறுகிறது. பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையைப் (சுயநிர்ணய உரிமையை) பெறுவதன் மூலமே இந்த ஒடுக்குமுறையிலிருந்து தமிழ்த்தேசிய இனத்தை விடுவிக்க முடியும்.

தேசிய இன ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தன்னுரிமைப் போராட்டத்தின் ஊடாக, வர்க்க மற்றும் வர்ண-சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக போராட்டத்தைத் தொடர வேண்டும். அதாவது, முதன்மையான முரண்பாட்டைத் தீர்க்கும் போராட்டத்தின் ஊடாக அடுத்த நிலையில் உள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் போராட்டத்தைஇணைப்பது ''தன்னுரிமை பாருக்கு தமிழ்த் தேச வரலாற்றில் புது யுகம் படைப்போம்''. என்பதே எங்கள் கட்சியின் குறிக்கோள் முழக்கம்.

தன்னுரிமைக்கான இயக்கம் தமிழ்நாட்டில் அரும்பி வளர்ந்து வருகிறது. எதிர்காலத்தில் தன்னுரிமை இயக்கமே தமிழகத்தின் பிரதான அரசியல் நீரோட்டமாகப் பெருகப் போகிறது காஷ்மீரி, பஞ்சாபி, அஸ்ஸாமி தேசிய இனங்கள் நடத்தும் தன்னுரிமைப்போராட்டங்கள் வளர்ச்சி அடைந்த நிலையில் இருக்கின்றன. இந்த நிலையில் தன்னுரிமைக்கான போராட்டமே இந்தியாவில் பிரதானபோராட்டமாக வளர்ந்துள்ளது.

எல்லா தேசிய இனங்களும் பிரிந்து போகும் உரிமையுடன் தன்னுரிமையை வழங்கி இவ

னர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதைக் கைவிட்டு பல கட்சிமுறையை ஏற்றுக்கொள்வது.

கேள்வி:

உலகில் நடைபெறுகின்ற சுய உரிமைக்கான போராட்டங்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்:

உலகில் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும், நடுவிலும் நடந்த தன்னுரிமைப போராட்டங்களுக்கும் இறுதிப் பகுதியான தற்போது நடைபெறும் தன்னுரிமைப் போராட்டங்களுக்கும இடையில் வேறுபாடு உள்ளது. அன்று பெரிதும் காலனிய ஆட்சியில் இருந்த தேசிய இனங்கள் தன்னுரிமைக்குப் போராடின. இன்று பெரிதும் முன்னால் காலனிகளுக்குள் இருக்கும் இந்நாள் காலனிகள் தன்னுரிமைக்காகப் போராடுகின்றன. பழைய காலனிக்குள் புதிய காலனிகள் சிக்கிக் கொண்டதும் ஏகாதிபத்தியங்கள் விட்டுச் சென்ற 'பரம்பரை - நோயின்' பின் தொடர்ச்சியே!

ஏகாதிபத்தியங்கள் உலகைப் பங்கு போட்டுக் கொண்டபோது, துப்பாக்கி முனையில் எல்லைக் கோடுகள் கீறி, வரலாற்றில் புதிய

மைப் போராட்டங்கள் இதற்கான சில எடுத்துக்காட்டுகள்

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் அதனின்றும் மாறுபட்ட இன்னொருவகை அங்குபுதிதாக உருவாக்கப்பட்ட சுதந்திர இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் சுதந்திரத்தை விழுங்கியது.

அடுத்து, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடான கனடாவிலும் சோஷலிச நாடுகளாக இருந்த சோவியத் ஒன்றியம் மற்றும் யூகோஸ்லாவியாவிலும் எழுந்த தன்னுரிமைப் போராட்டங்கள் இவ்வளவு வளர்ச்சியடைந்த பல் தேசியக் கூட்டாட்சியிலும் பெரும்பான்மை தேசிய இனம் தன்னிலும் சிறுபான்மையாய் உள்ள தேசிய இனங்களுக்கு சமத்துவம் வழங்கவில்லை என்பதையே காட்டுகிறது. இதனால் கூட்டாட்சி முறையே கேள்விக்குரியதாகி உள்ளது. ஜனநாயகம், கருத்துரிமை போன்ற உரிமைகள் பற்றி வானளாவப் பேசும் பிரிட்டன், ஐரிஷ் தேசிய இன மக்களுக்கு தன்னுரிமையை நிராகரித்து ஒற்றை ஆட்சிமுறையை வைத்துள்ளது. சோஷலிச சீனமோ திபேத்தியர்களின் தன்னுரிமையை மறுக்கிறது; ஒற்றை ஆட்சி முறையை வைத்துள்ளது.

கிய வழியில் செல்ல நிர்ப்பந்தித்த காரணிகளாகும்.

ஒரு தேசிய இனத்துக்குரிய அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ள ஈழத்தமிழர்கள் தங்களுக்குரிய தேசத்தை அமைத்துக்கொள்ள முழு உரிமை படைத்தவர்கள். ஒரு புரட்சிகர இலட்சியத்தை அடைய புரட்சிகர அமைப்புத் தேவை. புரட்சிகரஅமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு இருக்கிறது. வரலாற்றில் சோதிக்கப்பட்ட அமைப்பாக அது உள்ளது.

''இதனை இதனால் இவன் முடிக்கும்
என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்''

கேள்வி:

தற்போதைய புவிசார் அரசியல் நிலைமைகளில் இந்தியாவின் பாத்திரம் எந்தவகையில் உள்ளது? எதிர்காலத்தில் எந்த நிலையை அடையும்? உங்கள் கருத்து என்ன?

பதில்:

புவிசார் அரசியலில் இந்தியாவின் பாத்திரம் தோல்விக்குரியதாகவே இருக்கிறது. நீண்டகாலமாகவே இதுதான் நிலை. இப்போது தெற்காசிய கூட்டுறவுச்சபையே (சார்க்) சிதையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமாக இந்தியாவைச் சுட்டி விரல்நீட்டப்படுகிறது. பூட்டானைத் தவிர பக்கத்து நாடுகள் எதனுடனும் நல்லுறவு இல்லை.

இலங்கைப் பிரச்சினையில் கூட இந்திய அரசு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் ஒரே நேரத்தில் பொது எதிரியாகியுள்ளது.

இப்படிப்பட்டபின்னணியில் தெற்காசியாவில் பிராந்திய வல்லரசாக, இந்தியாவிற்கு வாய்ப்பில்லை. ஆளும்வர்க்கத்திற்கு அப்படி ஒரு ஆசை இருக்கலாம்; அது நடக்காது.

இந்துமாக் கடல் பகுதியை அமைதி மண்டலமாக்கும் முயற்சியில் கூட இந்திய ஆளும் வர்க்கத்திற்குக் கூடுதலான அக்கறை கிடையாது. ஏனெனில், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் நட்புறவு வைத்துக் கொண்டு, உள்நாட்டைத்

ஈழப் பிரச்சினைகளில் இந்தியாவின் அணுகுமுறையை மேற்கத்தைய அரசுகளும் அனுசரிப்பதற்குக் காரணம், ஈழத்தை விடவும் இந்தியா பல மடங்கு பெரிய சந்தை என்பதுதான். இப்பிரச்சினையில் இந்தியாவின் உரசல் வேண்டாம் என்று அவை நினைக்கின்றன.

வெளிநாடுகளில் இந்தியாவிற்கு ராஜதந்திர மதிப்பை விட சந்தை மதிப்பே அதிகம்.

கேள்வி:

தமிழகத்தில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த வகைப் பிரச்சாரங்களுக்கான உள்நோக்கம் என்ன?

பதில்.

தமிழகத்தில் தமிழீழ விடுதலைக்கு எதிரான பிரச்சாரங்களை நேரடியாக முடுக்கி விட முடியாது. ராஜீவ் காந்தி கொலையை ஒரு சாக்காக வைத்து, விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் நாட்டில் இடம் இல்லை என்ற பிரச்சாரத்தையும் அடக்கு முறையையும் முடுக்கிவிட்டுள்ளனர்.

இது ஈழ விடுதலையை எதிர்க்கும் நோக்கம் கொண்டது.

ஈழவிடுதலைக்கு எதிராக இவ்வாறு பிரச்சாரம் செய்வோரின் உள்நோக்கம் இதுதான்:

ஈழ விடுதலைப் போராட்டம் தமிழ் நாட்டில் தமிழ், தமிழன் என்ற மொழி - இன உணர்வுகளுக்கு ஊக்கம் கொடுக்கிறது. தமிழகத்தின் தன்னுரிமைப் போராட்டத்திற்கும் ஊக்கம் கொடுக்கும். 'இந்தியன்' என்ற செயற்கையான ஒரே தேசிய இனப் போர்வையைப் போர்த்திவிட்டு கூடுதலான அரசியல், பொருளாதார, சமூகப் பலன் அடையும் பெருமுதலாளிய-பார்ப்பனீய இந்தி ஆதிக்க சக்திகளும் அவர்களை அண்டிப் பிழைக்கப்போகும் தங்கள் 'வியாபாரத்துக்கு' ஆபத்து வருகிறது என்று அஞ்சுகிறார்கள். இவர்கள் தமிழர்களின் இன உணர்ச்சிக்கும் உரிமைக்கும் எதிரிகள்.

கண்மூடித்தனமாக ''விடுதலைப் புலிகள் எதிர்ப்புப்பிரச்சாரம்'' செய்வோர்கூட; நாங்கள் ஈழம் அமைவதை எதிர்க்கவில்லை; விடுதலைப் புலிகளைத்தான் எதிர்க்கிறோம் என்கிறார்கள். ஏனெனில் தனி ஈழத்திற்கு தமிழ

முயற்சிப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே இப் பிக்குகளின் வருகையால் யுத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளையும் இதேவேளை, அழிவுகளுக்கோ அன்றி இறப்புக்களுக்கோ அஞ்சி தமது உறுதியைக் கைவிடவில்லை என்பதையும் புரிந்து கொள்ள உதவுவதோடு இராணுவத்தீர்வு ஒன்றினால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும் அதோடு உண்மைக்கு புறம்பான செய்திகளையே தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கம் வெளியிட்டு வருவதும் தெரியவரும்.

ஆனால், பௌத்த பிக்குகளின் விருப்பத்தின்படி இனவாதிகள் என்றோ தமிழருக்கு எதிரானவர்கள் என்றோ உலகில் பரவியுள்ள அபிப்பிராயத்தை நீக்குவது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். தமிழருக்கு எதிரானவரல்லாமல் இனத்துவேசிகள் அல்லாமல் ஒரு சில பிக்குகள் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான பிக்குகள் இனத்துவேசிகளாகவும் தமிழின விரோதிகளாகவுமே உள்ளனர் என்பதையே அவர்கள் நடத்தை நிருபிக்கின்றது.

இதற்கு இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து தொண்டமானின் சமரசத்திட்டம் வரை பௌத்த பிக்குகள் நடந்து கொண்ட முறையினை உதாரணமாகக் கூறலாம். இலங்கையில் தமிழரின் இரத்த ஆறு ஓடுவதற்கு பல பிக்குகள் காரணமாக இருந்துள்ளார்கள். அத்தோடு இன்றும் தமிழர் பிரதேச ஆக்கிரமிப்பிலும் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளிலும் பிக்குகள் நேரடியாகத் தொடர்பு பட்டுள்ளனர்.

அதாவது, பௌத்த பிக்குகள் தமிழர் விடயத்தில் எப்பொழுதும் புத்தரின் போதனைகளைப் பின்பற்றி நடக்கவில்லை. இன்றுகூட தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசாங்கம் மேற் கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளை பிக்குகள் கண்டிக்கவில்லை அரசாங்கம் யுத்தத்தைக் கைவிட வேண்டும் என காருணியத்துடன் ஒருபோதும் வற்புறுத்தவில்லை. இராணுவ முகாமிற்குச்சென்று ஆசிவழங்குவதிலேயேமுனைப்பாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, சில பிக்குகள் என்றுமில்லாதவாறு நல்லெண்ண முயற்சியாக வடக்கிற்கு வந்து விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச முயற்சிக்கின்றார்கள் என்றதும் பௌத்தபிக்குகள் அதற்கு எதிராகக் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். விடுதலைப் புலிகளே நம்மைத்தேடிவர வேண்டும் நாம் புலிகளைத் தேடிச்செல்வது தரக்குறைவான செயல் எனப் பொலநறுவைமாவட்ட பிரதான சங்க நாயக்கதேரோ சும்பக்கடலல ஸ்ரீ பிரானந்த தெரிவித்துள்ளார் இதே போன்றதொரு கேள்வியையே கோட்டே விகாராதிபதியும் எழுப்பியுள்ளார்.

இலங்கைக்கு புத்தர்பிரான் மூன்றுமுறை விஜயம் செய்தார் எனவும், இதில் ஒருமுறை இயக்கர்களுக்கும்-நாகர்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதலை நிறுத்திச் சமாதானம் செய்துவைக்க வந்தார் எனவும் பௌத்தர்களின் இதிகாச நூலான மகாவம்சம் கூறுகின்றது ஆனால், இன்று அதன்வழியைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் பௌத்தபிக்குகளில் பெரும்பான்மையினர் பிக்குகள் சமாதானம் ஏற்படத் தூதுபோவது கௌரவக் குறைவெனக் கூறும் நிலைக்கு வந்துள்ளார்கள்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியாக தீர்வுகாண முற்பட்டிருக்கும் பிக்குகளின் முயற்சிகள் எந்தளவிற்கு சாத்தியப்பாடானவையாக இருக்கும் என்பது கேள்விக்குரியதொன்றே அவர்களின் பகிரதப் பிரயத்தனத்தால் சமாதானம் ஒன்று ஏற்படினும், அதன் மூலம், இலங்கை வரலாற்றில் பிக்குக்கள் வகித்த பங்கை மாற்றிவிட முடியாது. அதாவது புதிய வரலாறுகள் படைக்கலாமே ஒழிய பழைய வரலாறு மாற்ற முடியாது.

---

பற்றி எங்கள் கட்சியின் குறிக்கோள் முழக்கம்.

தன்னுரிமைக்கான இயக்கம் தமிழ்நாட்டில் அரும்பி வளர்ந்து வருகிறது. எதிர்காலத்தில் தன்னுரிமை இயக்கமே தமிழகத்தின் பிரதான அரசியல் நீரோட்டமாகப் பெருகப் போகிறது. காஷ்மீரி, பஞ்சாபி, அஸ்ஸாமி தேசிய இனங்கள் நடத்தும் தன்னுரிமைப்போராட்டங்கள் வளர்ச்சி அடைந்த நிலையில் இருக்கின்றன. இந்நிலையில் தன்னுரிமைக்கான போராட்டமே இந்தியாவில் பிரதானபோராட்டமாக வளர்ந்துள்ளது.

எல்லா தேசிய இனங்களும் பிரிந்து போகும் உரிமையுடன் தன்னுரிமையை வழங்கி அவற்றின் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சியாக இந்தியாவை மாற்றி அமைப்பதே இந்தியாவின் எதிர்காலத்திற்கு நல்லது.

இவைதான், தமிழகம் மற்றும் இந்தியாவின் எதிர்காலம் பற்றிய எங்கள் நிலைப்பாடு.

**கேள்வி:**

உங்களது கட்சியின் அடிப்படைக் கொள்கை என்ன?

**பதில்:**

தமிழ்நாட்டிற்குத் தன்னுரிமை பெறுவது தமிழகச் சூழலுக்கு ஏற்ற முறையில் படிப்படியாக சோஷலிசத்தை நோக்கி தமிழ்ச் சமூகத்தை முன்னேற்றுவது. தமிழ்ச் சமூகத்தில் வர்ண-சாதி ஒடுக்கு முறையை நீக்கி சமூக நீதியை நிலைநாட்டுவது. பண்பாட்டு புதுமெழுச்சி, பெண்விடுதலை, சுற்றுப்புறச் சூழல்பாதுகாப்பு. தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவை எங்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள்.

தமிழ்நாட்டில் இதுவரை வளர்ந்துள்ள முற்போக்கான சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்ட மண்ணுக்கேற்ற மார்க்சியம் எங்கள் கட்சிக்கு வழிகாட்டும் நெறியாகும். மார்க்சியத்தை ஒருவாய்ப்பாடாகவோ அல்லது பிற நாட்டு நடைமுறையின் நகலாகவோ அணுகாமல் சொந்தப் படைப்பாற்றலுடன் அத்தத்துவத்தைப் பயன்படுத்துவது எங்கள் அணுகுமுறையாகும். சோவியத் ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிகள் வீழ்ச்சி அமைந்ததில், உரிய பாடங்களை நாங்கள் கற்றுக் கொள்கிறோம். மார்க்சிய லெனினியக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது அந்நாட்டில் ஏற்பட்ட தவறுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தேவையான திருத்தங்களைச் செய்து செழுமைப்படுத்துவது என்பதும் எங்கள் அணுகுமுறை. பின்

யில் வேறுபாடு உள்ளது. அன்று பெரிதும் காலனிய ஆட்சியில் இருந்த தேசிய இனங்கள் தன்னுரிமைக்குப் போராடின. இன்று பெரிதும் முன்னாள் காலனிகளுக்குள் இருக்கும் இந்நாள் காலனிகள் தன்னுரிமைக்காகப் போராடுகின்றன. பழைய காலனிக்குள் புதிய காலனிகள் சிக்கிக் கொண்டதும் ஏகாதிபத்தியங்கள் விட்டுச் சென்ற 'பரம்பரை - நோயின்' பின் தொடர்ச்சியே!

ஏகாதிபத்தியங்கள் உலகைப் பங்கு போட்டுக் கொண்டபோது, துப்பாக்கி முனையில் எல்லைக் கோடுகள் கீறி, வரலாற்றில் புதிய நாடுகளை உருவாக்கின. இந்தப் 'புதிய நாடுகள்' ஒவ்வொன்றிலும் பல்வேறு தேசங்களும் தேசிய இனங்களும் பிணைக்கப்பட்டன. காலப்போக்கில். பொது எதிரியான ஏகாதிபத்தியத்தை எதிர்த்து 'புதிய நாட்டில்' இருந்த தேசிய இனங்கள் ஒன்று சேர்ந்து போராடின,

ஏகாதிபத்தியங்களிடமிருந்து விடுதலை அடைந்த பின்னர், இந்த நாடுகளில் உள்ள தனிப்பெரும்பான்மை மக்கள் தொகை கொண்ட தேசிய இனம் தன்நாட்டில் உள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களை ஒடுக்கத் தொடங்கின பேருக்கு ஒரு கூட்டாட்சியை வைத்துக்கொண்டோ அல்லது ஒற்றை ஆட்சியை வைத்துக்கொண்டோ ஒடுக்குகின்றன.

அன்று, வெறும் துப்பாக்கி தேசத்திற்கு எல்லை கோலியது; இன்று வாக்குச் சீட்டு சுற்றப்பட்ட துப்பாக்கி அந்த எல்லையைக் கட்டிக் காக்கிறது. ஏகாதிபத்தியத்தால் உருவான செயற்கைத் தேசியம் இயற்கைத் தேசியத்தை விழுங்கிவிட்டது. (எ.டு. இலங்கைத் தேசியம் ஈழத் தேசியத்தை மறுப்பது) அன்று சுதந்திர முழக்கமே 'தேசத்தின் மூச்சு' என்றவர்கள். இன்று சுதந்திரம் என்றாலே 'தேசம் பேச்சு' என்கிறார்கள். பழைய 'அடிமைகளில்' ஒரு பகுதியினர் புதிய 'எஜமானர்கள்' ஆனார்கள்; மறுபகுதியினர் 'புதிய அடிமைகள்' ஆனார்கள்.

புதிதாக விடுதலை அடைந்த பல்தேசிய இன நாடுகளில், இன்று நடைபெறும் புதிய தன்னுரிமைப் போராட்டங்கள் ஒடுக்கு முறைக்கு எதிரானவை; ஜனநாயக உள்ளடக்கம் கொண்டவை; சமூக வளர்ச்சியின் ஒரு கட்டத்தைக்குறிப்பவை; இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஈராக் போன்ற நாடுகளில் நடைபெறும் தன்னுரிமைப் போராட்டங்களும் பெரும்பான்மை தேசிய இனம் தன்னிலும் சிறுபான்மையாய் உள்ள தேசிய இனங்களுக்கு சமத்துவம் வழங்கவில்லை என்பதையே காட்டுகிறது. இதனால் கூட்டாட்சி முறையே கேள்விக்குரியதாகி உள்ளது. ஜனநாயகம், கருத்துரிமை போன்ற உரிமைகள் பற்றி வானளாவப் பேசும் பிரிட்டன், ஐரிஷ் தேசிய இன மக்களுக்கு தன்னுரிமையை நிராகரித்து ஒற்றை ஆட்சிமுறையை வைத்துள்ளது. சோஷலிச சீனமோ திபேத்தியர்களின் தன்னுரிமையை மறுக்கிறது; ஒற்றை ஆட்சி முறையை வைத்துள்ளது.

இவ்வாறாக தன்னுரிமைப் போராட்டங்களில் பல வகைகள் இருக்கின்றன.

சோஷலிசத்தை அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டுள்ள த.தே.பொ.க. ஒரு தேசிய இனம் சோஷலிச சமூக அமைப்பில் இருக்கிறதா என்பதை விடவும் அது சுதந்திரமாக இருக்கிறதா என்பதையே முதல் கேள்வியாக வைக்கவேண்டும் என்று கருதுகிறது. எனவே, சோஷலிச நாடுகள் உள்ளிட்டு உலகெங்கும் நடைபெறும் தன்னுரிமைப்போராட்டங்களை ஆதரிக்கிறது. இன்று உலகஅளவில் போராடும் சக்திகளாக ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களே திகழ்கின்றன. ஒடுக்குமுறை, எதேச்சதிகாரம், சுரண்டல் ஆகியவற்றை எதிர்க்கும் அனைத்து ஜனநாயகவாதிகளும் மார்க்சீய வாதிகளும் இப்போராட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

**கேள்வி:**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் எந்தக் கண்ணோட்டத்தோடு நோக்குகின்றீர்கள்?

**பதில்:**

இரண்டு தேசிய இனங்கள் வாழுகின்ற இலங்கையில் பேருக்குக் கூட ஒரு கூட்டாட்சி இல்லை. இதிலிருந்தே. சிங்களப் பேரினவாதிகளின் ஒடுக்குமுறையும் சுரண்டலும் எவ்வளவு மூர்க்கத்தனமானவை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் பொங்கிஎழுந்த போதெல்லாம், பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்றுநடித்து நயவஞ்சகம் புரிந்து பின்னர் இராணுவம் கொண்டு தாக்கிய சிங்கள அரசியல் தலைமைகளும். தமிழர் தன்னுரிமை முழக்கத்தை மூலதனமாக்கி 'நாற்காலி அரசியல்' நடத்திய தமிழர் தலைவர்களும் ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதந் தாங்

இலங்கைப் பிரச்சினையில் கூட இந்திய அரசு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் ஒரே நேரத்தில் பொது எதிரியாகியுள்ளது.

இப்படிப்பட்டபின்னணியில் தெற்காசியாவில் பிராந்திய வல்லரசாக, இந்தியாவிற்கு வாய்ப்பில்லை. ஆளும்வர்க்கத்திற்கு அப்படி ஒரு ஆசை இருக்கலாம்; அது நடக்காது.

இந்துமாக் கடல் பகுதியை அமைதி மண்டலமாக்கும் முயற்சியில் கூட இந்திய ஆளும் வர்க்கத்திற்குக் கூடுதலான அக்கறை கிடையாது. ஏனெனில், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் நட்புறவு வைத்துக் கொண்டு, உள்நாட்டைச் சுரண்டுவது, வெளிநாட்டுச் சந்தை தேடுவது என்பதே அவர்களின் பொருளாதார உத்தியாக உள்ளது.

இலங்கைக்குப் படை அனுப்பியதில், இந்தியாவின் புவிசார் அரசியலை விட உள்நாட்டு அரசியலே முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

தனி ஈழம் அமைந்து விட்டால், அது இந்தியாவில் தனித் தமிழ்நாடு உருவாக உந்து சக்தியாகும்: காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம் விடுதலைப் போராட்டங்களுக்கு பெரும் நம்பிக்கை அளிக்கும் என்று இந்திய அரசு அஞ்சுகிறது. ஈழ விடுதலையை எதிர்க்கிறது. இந்திய ஆட்சியாளர்கள் புவிசார் அரசியலுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்திருந்தால் ஈழத்தை அங்கீகரித்து நட்பு நாடாக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

இந்தியாவின் ஆதரவுடன் பிறந்து இந்தியாவின் நட்பு நாடாக விளங்கக்கூடிய தனி ஈழம் கொடுக்கும் உந்து சக்தியை விட, இப்போது இந்தியப் படையை எதிர்த்துப் போராடி திருப்பி அனுப்பி விட்டு, சிங்களப் படையுடன் போராடி முன்னேறும் விடுதலைப் புலிகளின் போர் அதிக உந்து சக்தியை இந்தியாவில் போராடும் தேசிய இனங்களுக்கு அளிக்கிறது மிக முக்கியமானது, தமிழ்நாட்டின் தன்னுரிமைக்கோரிக்கையோ, பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் விடுதலைப் போராட்டங்களோ அடிப்படையில் ஈழப் போராட்டத்தைச் சார்ந்தவை அல்ல இவை தங்கள் நாட்டுப் பிரச்சினைகளின் அடிப்படையில் எழுந்தவை.

பொதுவாக, உட்நாட்டு பிரச்சினைகளில் ஆழமாக சிக்கிக் கொண்டுள்ள ஒரு நாடு வெளிநாட்டுப் பிரச்சினைகளில் வெற்றிஈட்ட முடியாது. இந்தியாவிற்கு இது பொருந்தும். வருங்காலத்திற்கூட, புவிசார் அரசியலில் இந்தியாவால் குறிப்பிடத்தகுந்த பாத்திரம் வகிக்க முடியாது.

விட்டு கூடுதலான அரசியல், பொருளாதார, சமூகப் பலன் அடையும் பெருமுதலாளிய-பார்ப்பனீய இந்தி ஆதிக்க சக்திகளும் அவர்களை அண்டிப் பிழைக்கப்போகும் தங்கள் 'வியாபாரத்துக்கு' ஆபத்துவருகிறது என்று அஞ்சுகிறார்கள். இவர்கள் தமிழர்களின் இன உணர்ச்சிக்கும் உரிமைக்கும் எதிரிகள்.

கண்மூடித்தனமாக ''விடுதலைப் புலிகள் எதிர்ப்புப்பிரச்சாரம்'' செய்வோர் கூட; நாங்கள் ஈழம் அமைவதை எதிர்க்கவில்லை; விடுதலைப் புலிகளைத்தான் எதிர்க்கிறோம் என்கிறார்கள். ஏனெனில் தனி ஈழத்திற்கு தமிழகத் தமிழர்களிடையே உள்ள ஆதரவு அவ்வளவு வலுவானது. விடுதலைப் புலிகள் இல்லாமல் தனிஈழம் அமைய வாய்ப்பில்லை என்று தெளிவாகப் புரிந்து வைத்துள்ள தமிழ் மக்களிடம் இவர்களின் எதிர்ப்பிரச்சாரம் எடுபடாது.

**கேள்வி:**

தமிழீழத்திற்கும் தமிழ்நாட்டிற்குமான தொடர்புகள் என்ன? உறவுகள்?

**பதில்:**

ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் ஒரே இனம். இவர்களின் தாய் மொழியும் ஒன்றே. நாடுகள் தனித்தனி. அரபுகளுக்குப் பல நாடுகள் இருப்பது போல் தமிழர்களுக்கு இரு நாடுகள்.

தமிழ் ஈழ விடுதலைப் போரை ஆதரிப்பது தமிழகத் தமிழர்களுக்கு ஒரு தார்மீகக் கடமை மட்டும் அல்ல, ஒரு சகோதரக் கடமையும் பிறப்பு உரிமையும் ஆகும்.

ஆனால் ஈழ விடுதலைப் போராட்டமும் தமிழகத்தின் தன்னுரிமைப் போராட்டமும் களம், காலம், உள்ளடக்கம், வடிவம் இவற்றால் வேறுபட்டவை. ★

---

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கம், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த குருளைச் சாரணர், திரிசாரணர், மற்றும் சாரண ஆசிரியர்கள், குருளைச் சாரண ஆசிரியர்கள் உதவி மாவட்ட ஆணையாளர்கள் ஆகியோருக்கான விசேட கூட்டம் இன்று திங்கட் கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சாரணர் சம்பந்தப்பட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாது சமுகமளிக்கும்படி உதவிமாவட்ட சாரணஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழநாதம்

# லிபியா மீது பொரு: தடை; ஐ.நா.பாதுகாப்புச் சபை முடிவு

(நியூயோர்க்)

அமெரிக்க விமானக் குண்டு வெடிப்புத் தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் இருவரையும் லிபியா கையளிக்கத் தவறிய காரணத்துக்காக ஐ நா. பாதுகாப்புச் சபை லிபியா மீது பொருளாதாரத் தடையொன்றினைக் கொண்டு வருவது என முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இன்னும் ஓரிரு தினங்களில் பொருளாதாரத் தடையினை ஐ நா. சபை கொண்டு வந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க, பிரித்தானியா, பிரான்ஸ், ஆகிய நாடுகள் முன் வைத்த தீர்மானங்கள் குறித்து பாதுகாப்புச் சபை கடந்த வியாழக் கிழமை கூடி ஆராய்ந்தது இன்று அனேகமாக லிபியா மீது பொருளாதாரத்தடை கொண்டு வரும் முடிவு எடுக்கப்பட்டுவிடுமென சபைத்தலைவர் வெனிசுவேலா நாட்டவரான டியகோ ஆரியா கூறினார்.

ஐ நா பாதுகாப்புச் சபையில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்ற போதிலும் லிபியா மீது பொருளாதார தடை கொண்டு வரும் தீர்மானத்துக்கு எல்லா நாடுகளும் வாக்களிக்கப் போவதில்லை ஆயினும் தீர்மானத்தை நிறைவேற்றக் கூடியளவும் வாக்குகள் கிடைக்குமென ராஜதந்திரிகள் கருதுகின்றனர். அத்துடன் சீனாவும் இந்தியாவு சாட்டுகளைச் சொல்லி நழுவிக் கொள்ள முனைவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அரபு லீக் லிபியா சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வந்தமை ஐ நா. பாதுகாப்புச் சபை அங்கத்தவர்களின் ஆத்திரத்தை கிளறியுள்ளது.

அரபு லீக்குக்குலிபியத்தலைவர் கடாபி எழுதிய கடிதம் மேற்குலகநாடுகளின் கோரிக்கைகளை ஈடுசெய்யப் போவதில்லை எனவும் கூறப்படுகிறது.

லிபியா மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டால் லிபியாவுக்கான விமானப் போக்குவரத்துகள் யாவும்ரத்துச் செய்யப்படும் எனவும், ஆயுதத் தடைஅமுலுக்குவரும் எனவும் வெளிநாடுகளிலுள்ள லிபிய ராஜதந்திரிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டு விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் அரபுலீக் பொறுப்பேற்று ஐ. நா பிரதிநிதியின் முன்னிலையில் ஐ நா. தீர்மானத்துக்கு அமைவாக லிபியர்கள் இருவரையும் கையளிக்குமென எதிர்பார்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பர்மாமீது ஆயுதத்தடை நோர்வே கோரிக்கை

(ஒஸ்லோ)

பர்மா மீது ஆயுதத்தடை கொண்டு வரும்படி நோர்வே ஐ. நா. பாதுகாப்புச் சபையை கோரியுள்ளது.

பர்மாவின் கொள்கைகள் பிராந்தியத்தின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஊறு விளைவிக்கக் கூடியனவாக உள்ளன. அதனால் பர்மாமீது ஆயுதத் தடை கொண்டுவரப்படவேண்டுமென நோர்வே வலியுறுத்தி உள்ளது.

பர்மாவில் மனித உரிமை மீறல் செயல்கள் இப்போது அதிகரித்த வண்ணமுள்ளன. இதனால் பங்களாதேசுக்குள் வரும் அகதிகளின்எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன என்றும்,

இன்னும் பல அகதிகள் அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்றும் நோர்வே தெரிவித்துள்ளது.

இதே நேரம் மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படும் உதவிகளை அதிகளவில்பர்மாவிற்கு வழங்கும் படியும் நோர்வே கேட்டுள்ளது.

## ஐ. பி. யின் தலைவராக வைத்தியா தெரிவு

(டில்லி)

இந்தியாவின் புலனாய்வுத் தாபனமான இன்டலிஜன்ட் பியூரோ (ஐ. பி) வின் புதிய தலைவராகசிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான வி. ஜி. வைத்தியா ஏப்ரல் முதலாம் திகதி பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த உளவுப் பிரிவின் தலைவராக எம். கே. நாராயணன் இருந்தார்.

மகாராஷ்டிரா மாநில பொலிஸ் சேவையாளராக 1962ஆம் ஆண்டு சேவையில் சேர்ந்த வைத்தியா பல்வேறு முக்கிய பொறுப்புக்களை வகித்துள்ளார்.

## வர்மா கமிஷன் அறிக்கை மே யில் சமர்ப்பிக்கப்படும்

## வீதி விபத்தில் 12 பேர் பலி

(டில்லி)

மேற்கு வங்காள மாநிலத்தில் அம்பாலா நகருக்கு அருகே நேற்று முன் தினம் நடைபெற்ற வீதி விபத்தில் பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் இருபதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பஸ் ஒன்று வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றுடன் மோதி பள்ளத்தில் வீழ்ந்

# பிரபுத்துவ குடும்பப்பெண்ணை மகளிர்தினம் வேடிக்கையானது

-மொனறாகலை மாவட்ட எம். பி.

(மாத்தறை)

"பெண்கள் பலர் காணாமல் போயுள்ள இன்றைய காலகட்டத்தில் அவர்களின் உறவினர்கள் கண்ணீர் சிந்தும் வேளையில் கொழும்பு ஏழில் வசிக்கும் பிரபுத்துவப் பெண்கள் பலர் சர்வதேச மகளிர் தினத்தின் பெயரால் கேளிக்கைகளை நடத்தி வருவது நகைப்பிற்கிடமான செயலாகும்." என மொனறாகலை மாவட்ட எம். பி. திருமதி. சுமத்த ஜி. ஜயசேன தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் இடம்பெற்ற மகளிர்தினவிழா ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது இந்த நாட்டில் வாழும் பெண்களைப் போல சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்ட பெண்கள் உலகில் வேறு எந்த ஒரு நாட்டிலும் கிடையாது மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களில் பெரும்பாலானோர் பல இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். அதே போன்று ஆடை தயாரிக்கும் நிலையங்களுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான பெண்கள் இன்று அடிமைகளைப் போல் நடத்தப்படுகின்றனர்.

ஆடை தயாரிப்பு நிலையங்களில் ஆயிரக் கணக்கான பெண்களுக்குத் தொழில் வாய்ப்பையும் பெற்றுக்கொடுத்துள்ளோம் என்று சிலர் வீராப்புப் பேசுகின்றனர். அங்கே பெண்கள்படும் துன்பத்தை இறைவன்தான் அறிவான். வாழ வழி இல்லாததாலேயே பெண்கள் அங்கு இன்னலடைகின்றனர்.

பெல்வத்தை சீனிக் கூட்டுத் தாபனத்தில் வேலை செய்யும் பெண்களுக்கு இன்று எவ்வித சுதந்திரமும் அளிக்கப்படுவதில்லை. பரம்பரை விவசாயப் பெண்கள் இன்று கம்பனிகளில் கூலிக்காரர்களாக மாறியிருக்கின்றனர்,

பெண்களை ஒன்றிணைத்து கேளிக்கை நடத்தும் காலம் இன்று உதயமாகியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இந்தக் கேளிக்கைகளும் கூத்துக்களும் தேவைதானா? பெண்களின் இழந்துள்ள உரிமையைப்பெறுவதே இன்று அவசியமும் அவசரமுமாக இருக்கின்றது. பெண்கள் அனைவரும் தமது இழந்துபோன உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக போராட முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## பொறியியல் மாணவனுக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் ஆண்டு மாணவன் குமார் பஞ்சரட்ணம் நிமால் என்பவர் கொழும்பு மருத்துவபீடத்தில் கிட்னி மாற்றுச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இவருக்கு தேவைப்பட்ட மாற்றுக் கிட்னியை இவரது தந்தையாரான பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபாலதிபர் பஞ்சரத்தினம் வழங்கவுள்ளார்

இதற்கான சிறுநீரக மாற்றுச் சிகிச்சை எதிர்வரும் இரண்டாம் திகதியன்று கொழும்பில் டாக்டர் றிஸ்வி செரீப்பினால் மேற்கொள்ளப் படவுள்ளது

## வரட்சி நீடித்தால் பெருமளவு அரிசி இறக்குமதி செய்ய வேண்டி வரும்

(கொழும்பு)

தற்போதைய வரட்சி நிலை மேலும் நீடித்தால் உள்நாட்டுத் தேவையைச் சமாளிக்க பெருமளவில் அரிசி இறக்குமதி செய்ய நேரிடுமென விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாஸ பண்டா தெரிவித்துள்ளார்.

தற்போதைய வரட்சியின் காரணமாக மழையை நம்பி நெற்பயிர் செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலமாவட்டங்களில் நெற்செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

வரட்சியால் நெற்செய்கை எவ்வளவுதூரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதற்கான மதிப்பீடு தற்போது நடைபெறுகிறது என்றும்,

அரிசி இறக்குமதியை அதிகரிப்பது குறித்து இன்னமும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தர்மதாசா பண்டா தெரிவித்துள்ளார்.

# பாவமன்னிப்புக் கோரும் பாதயாத்திரை - பிரேமா

(கொழும்பு)

ஆண்டவனையும், மதங்களையும் கேலி செய்தவர்கள் இன்று பாவமன்னிப்புக் கோரி கதிர்காம யாத்திரை மேற்கொண்டுள்ளார்கள் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

மொனராகல மாவட்டத்தில் லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தை திறந்துவைத்த பின் நடந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் கடவுளையும், மதத்தையும் நிந்தித்தவர்கள் கொதிக்கும் வெய்யிலில் மைல் கணக்கான தூரம் நடந்து பிராயச்சித்தம் செய்கிறார்கள் கார்ல் மார்க்சில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இப்போது கதிர்கா

கவே தான் அதிகாரத்துக்கு வந்ததாகவும், வசதிபடைத்த சிலருக்கு சலுகை வழங்குவதற்காக அல்ல என்றும் தெரிவித்தார் மக்களின் நன்மைக்காக தான் மேற் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களான பத்துப் பேர் தான் அண்மையில் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## பாதயாத்திரைக்கு ஆதரவு பெருகி வருகிறதாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க் கட்சிக் கூட்டணியினரால் நடாத்தப்படும் பாதயாத்திரைக்கு நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகி வருகிறது.

பாதயாத்திரை ஆரம்பிக்கும் போது இருந்த ஆதரவைவிட தற்பொழுது பன்மடங்கு ஆதரவு கிடைத்து வருவதாக

யில் நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டத்திலேயே எதிர்க்கட்சிக் கூட்டணியின் கொள்கைகள் அடங்கிய அறிக்கைவெளியிடப்பட இருக்கிறது.

அதேவேளை எதிர்க்கட்சித்

## இன்றைய போட்டிகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வலைபந்தாட்டப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவிற்கான இன்றைய போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ் கொசப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி முரசொலி விளையாட்

(டில்லி)

இந்தியாவின் புலனாய்வுத் தாபனமான இன்டலிஜன்ட் பியூரோ (ஐ. பி) வின் புதிய தலைவராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான வி. ஜி. வைத்தியா ஏப்ரல் முதலாம் திகதி பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வரை இந்த உளவுப் பிரிவின் தலைவராக எம். கே. நாராயணன் இருந்தார்.

மகாராஷ்டிரா மாநில பொலிஸ் சேவையாளராக 1962ஆம் ஆண்டு சேவையில் சேர்ந்த வைத்தியா பல்வேறு முக்கிய பொறுப்புக்களை வகித்துள்ளார்.

## வர்மா கமிஷன் அறிக்கை மே யில் சமர்ப்பிக்கப்படும்

(டில்லி)

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட சிறிபெரும்புதூர் பொதுக்கூட்டத்தில் பாதுகாப்பு ஒழுங்குகள் சரியாகச்செய்யப்பட்டனவா என்பதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட நீதிபதி வர்மாகமிஷன் வரும்மேமாதம் மத்திய உள்துறை அமைச்சரிடம்அறிக்கையைச் சமர்பிக்கவுள்ளது.

நேற்றுப்புதுடில்லியில்இதனை தெரிவித்த வர்மா கமிஷனின் செயலாளர்சித்தீக் எதிர்காலத்தில் முக்கிய தலைவர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்ற யோசனைகள் அறிக்கையில் முக்கியஇடம்பெறும் என்றார்.

## வீதி விபத்தில் 12 பேர் பலி

(டில்லி)

மேற்கு வங்காள மாநிலத்தில் அம்பாலா நகருக்கு அருகே நேற்று முன் தினம் நடைபெற்ற வீதி விபத்தில் பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் இருபதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பஸ் ஒன்று வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனமொன்றுடன் மோதி பள்ளத்தில் வீழ்ந்ததில் இவ் விபத்து சம்பவித்தது.

## குர்திஷ் முகாம்கள் மீது விமானக் குண்டு வீச்சு

(அங்காரா)

வடஈராக் பகுதியில் ஊடுருவிய துருக்கி யுத்த விமானங்கள் துருக்கி குர்திஷ் முகாம்கள் மீது குண்டுகளை வீசித் தாக்கின. இந்த மாதம் நடைபெற்ற நான்காவது விமானத் தாக்குதல் இதுவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் குர்திஷ் தானில் துருக்கி யுத்த விமானங்கள் தாக்குதல் மேற்கொள்ள எத்தகைய காரணமும் இடையாதென குர்திஷ் ஜனநாயகக்கட்சிப் பிரமுகர் நெசர்வென் பர்சானி நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஜனநாயகம் மனித உரிமை பற்றி துருக்கிப் பிரதமர் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் குர்திஷ் தொழிலாளர் கட்சி பொறுமையிழந்தது எனகட்சித்தலைவர் அப்துல்லாஹ் ஒகலென் தெரிவித்தார். ஆர்த் தொழுமாறு குர்திஷ் தொழிலாளர் கட்சி அறைகூவல் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

இதே நேரம் துருக்கிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை சரியானதென அறிவித்துள்ளது.

இது குறித்து, ஹர்ரியட்' பத்திரிகைக்கு பேட்டியளித்த துருக்கிப் பிரதமர் சுலைமான் டிமிரெல் ''சர்வதேச அபிப்பிராயம் எதுவானாலும் சரி குர்திஷ் புரட்சி வாதிகளைத்துரத்தியடிப்போம் ஐரோப்பாவிற்கு நாங்கள் பயப்படவில்லை'' எனத் தெரிவித்துள்ளார்.

எட்டு வருடங்களாக இடைஞ்சல் உண்டு பண்ணி வரும் 'குர்திஷ் கெரில்லாக்கள் ஒழிக்கப்படுவர் என்றும் அதை அரசாங்கத்தால் நடைமுறைப் படுத்த முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் எல்லையில் மீண்டும் பதற்றம்

(டில்லி)

ஜே. கே. எல். எப். எனப்படும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி இன்று எல்லை தாண்டும் பேரணியை நடத்தப் போவதாக மீண்டும் அறிவித்துள்ளதையடுத்து பாகிஸ்தான் ஆட்சியிலுள்ள முசாகராபாத் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது. அவசர கால தடை உத்தரவான 144 சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதுடன் பெருமளவு பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் எல்லைப் பகுதியிலும் இராணுவ -பொலிஸ் நடமாட்டங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது.

## காவிரிநீர் பிரச்சினையை ஒத்துழைப்பு உணர்வோடு பேசித் தீர்க்க தீர்மானம்

காவிரிநதிநீர்ப் பங்கீடு குறித்த கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் பெங்களூரில் இடம்பெற்றது. கர்நாடகம், தமிழ்நாடு, மாநிலங்களை சேர்ந்த விவசாயசங்கத் தலைவர்கள், முன்னாள் நீதிபதிகள் அரசியல் வாதிகள், அமைச்சர்கள், சமூக நோக்கர்கள், எழுத்தாளர்கள் போன்றோர் இதில் கலந்து கொண்டனர்.

ஒத்துழைப்பு உணர்வோடு இப்பிரச்சினையை அணுகுமாறு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளையும்மக்களையும்இக் கருத்தரங்கு கேட்டுக் கொண்டது; அத்துடன் காவிரியில் போதுமான தண்ணீர் இருப்பதாகவும் நியாயமான அளவில் பகிர்ந்து கொள்ள வேண்டுமெனவும், இக் கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது

விவசாயிகள்தண்ணீரைச்சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமெனவும், நதிநீர் பிரச்சினைகள் சமரசப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. அத்துடன் காவிரி நதிநீர் பங்கீடு குறித்த பிரச்சினை பேச்சு வார்த்தைமூலம் தீர்வு காணப் படாமை குறித்து வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

மொனராகல மாவட்டத்தில் லுணுகம்வெஹர நீர்த்தேக்கத்தை திறந்துவைத்த பின் நடந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் கடவுளையும், மதத்தையும் நிந்தித்தவர்கள் கொதிக்கும் வெய்யிலில் மைல் கணக்கான தூரம் நடந்து பிராயச்சித்தம் செய்கிறார்கள் கார்ல் மார்க்சில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இப்போது கதிர்காமத்து தெய்வத்திடம் மன்னிப்புக் கோருவது மகிழ்ச்சி தருவதாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் மிகவும் வறிய மக்களுக்கு சுபீட்சத்தை அளிக்கும் ஒரு யுகத்தை உருவாக்

### றோவின்

வடிக்கையில் பொலிஸ் படைக்கு இந்திய புலனாய்வுப் பிரிவான 'றோ'வும் ஒத்துழைப்பு வழங்கிவருகிறது.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதா உட்படப் பல முக்கியஸ்தர்களை புலிகள் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பதாகக் கூறி விடுதலைப் புலிகளை ஒழிக்க முதல்வர் மத்திய அரசின் உதவியை ஏற்கெனவே நாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### எதிரான

லங்கா மகாஜன பக்ஷய, ராஜித சேனாரட்ன தலைமையிலான பகுஜன நிதாஸ் பெரமுன போன்றவற்றிற்கும் சிறிலங்கா சு. கட்சி ஏற்பாடு செய்த பொதுக் கூட்டங்களில் உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், அரசுக்கு எதிரான எல்லா சக்திகளையும் ஓரணியில் சேர்க்க வேண்டுமென விருப்பம் வெளியிட்டுள்ளார்.

### 13 எதிர்க்கட்சிகள்

நாயகம் வரை ஆரம்பிக்கும் தினமாக இருக்கும் என்று கூறினார்.

இவ்வாறு எதிர்க்கட்சிகளின் இணைந்த செயற்பாடு தென்னிலங்கை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாதயாத்திரைக்கு ஆதரவு பெருகி வருகிறதாம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சிக் கூட்டணியினரால் நடாத்தப்படும் பாதயாத்திரைக்கு நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகி வருகிறது.

பாதயாத்திரை ஆரம்பிக்கும் போது இருந்த ஆதரவை விட தற்பொழுது பன்மடங்கு ஆதரவு கிடைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது

எதிர்வரும் புதன் கிழமை நிறைவடைய இருக்கும் இப்பாத யாத்திரையின் இறுதியில் நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்தில் பெரும் தொகையான மக்கள் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டத்திலேயே எதிர்க்கட்சிக் கூட்டணியின் கொள்கைகள் அடங்கிய அறிக்கைவெளியிடப்பட இருக்கிறது.

அதேவேளை எதிர்க்கட்சிக் கூட்டணியினர் தமது பாதயாத்திரை தொடர்பாகக் கிராம மட்டத்தில் தீவிர பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### 5 இல. தமிழர்

பேட்டையில் மூவரும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு உள்ளதா என ஆராயப்பட்டு வருவதாக தமிழ்நாடு காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### புத்தாண்டு

தமது விஜயம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது ''வடபகுதிப் பிரச்சினை பெரும் தீயைப் போன்றது ஒரு வாளி தண்ணீர் ஊற்றினால் தீயின் வேகம் குறையும் இந்த முயற்சி விரும்பத்தக்கது'' என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைச் சந்தித்து தீவிரப் போக்கைத் தணித்து அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்த வரும்படி கேட்டுக் கொள்ள விருப்பதாகவும்,

வடக்கு, கிழக்கில் இருப்பவர் சிங்களவர்களாக இருக்கலாம். அல்லது தமிழர்களாக இருக்கலாம். இலங்கையர்களே இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது என்றும்,

பௌத்த குருமார் இவர்களுக்கு எந்தச் சலுகைகளையும் கொடுக்க இவர்கள் சம்மதிப்பதில்லை என்ற இத் தவறான கருத்தை நீக்குவதே எமது முயற்சியின் நோக்கம் என்றும் அசாஜி தேரர் கூறியுள்ளார்.

இதேவேளை புத்தாண்டிற்குப் பின்னரே இக் குழுவினர் யாழ். விஜயம் செய்வர் என பி.பி.ஸி செய்தியாளர் கிறிஸ்தேபர் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

வில்லை என்றும் தர்மதாசா பண்டா தெரிவித்துள்ளார்.

## இன்றைய போட்டிகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வலைபந்தாட்டப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவிற்கான இன்றைய போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொசப்பர்ஸ்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி முரசொலி விளையாட்டுக் கழக அணி விளையாடும்.

இன்று பி. ப 3.30 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## கிழக்கில் ஆசிரியர்களுக்கு சம்பளம் விநியோகம்

வடக்கு - கிழக்குமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு மார்ச்மாதத்திற்குரிய சம்பளத்தை வியாழன் முதல் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்படியாக கல்முனை, மட்டக்களப்பு பகுதிகளில் உள்ளபாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் தமது மார்ச்மாத சம்பளத்தை பெற்றுக் கொண்டனர். கல்முனை கோட்டக் கல்வி அலுவலகக் கணக்காளர் கணேசமூர்த்தி ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பாக வங்கிகளுடன் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை எடுத்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக 20 ஆம் திகதி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டியசம்பளம்இந்தமாதம் காலதாமதமாக வழங்கப்படுவது இங்குகுறிப்பிடத்தக்கது.

### தொண்டர்

இப்போராட்டம் பாடசாலை வகுப்பறைக் கல்வியை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை; சீரழிக்கவுமில்லை. பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாட்டை மாத்திரம் ஸ்தம்பிதமடையச்செய்துள்ளது. இதனால் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்படும் எனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளமை வருத்தத்திற்குரியது.

கல்வித் திணைக்களச்செயற்பாடு இதனால் முற்றாகஸ்தம்பிதமடையச் செய்யப்படுமானால் ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, பணிப்பாளர் உட்பட அனைத்து கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் சம்பளம் பெறமுடியாத நிலை ஏற்படும் என்பதைச் சகல தரப்பினரும் நன்குணர்ந்து கொண்டு, தொண்டர் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைக்குச் சுமுகமான முறையில் தீர்வு காண ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதே விவேகமானதாகும் என பொதுச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூநகரி பகுதியில் குண்டுச் சத்தம்

பூநகரிப் பகுதியிலிருந்து நேற்று நண்பகலளவில் பல தடவை பலத்த குண்டுச்சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

அதேவேளை வான் பிராந்தியத்திலும் சிறிலங்கா விமானப் படையினரது நடமாட்டமும் அதிகமாகக் காணப்பட்டது. எனினும் மேற்படி பகுதிகளில் இருந்து பூரண தகவல்களையும் நேற்று நள்ளிரவு வரை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### பரபரப்பான

மேலும் சில பிரிவு அங்கத்தவர்கள் வெளிநடப்புச் செய்தனர் இக் கூட்டத்திற்கு செய்தியாளர்கள் எவரும் அனுமதிக்கப் படவில்லை, பரபரப்பானசூழலில் கூட்டம்நடைபெற்றதால் தமிழீழக் காவல்த் துறையினரது கண்காணிப்புக்கள்தீவிரப் படுத்தப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

(75) (14) (பா)